**அயகம பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 07 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அயகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 119,875 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமையின் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரியதாக 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் மற்றும் கடன் கொடுத்தோர் பெறுமதி என்பன ரூபா 13,805 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் சிபாரிசின் பிரகாரம் 2018 மார்ச் 06 ஆந் திகதி ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்தமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் ரூபா 26,250 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதிஏற்பாடுகளிலிருந்து அமுல்படுத்தப்பட்ட இரண்டு கைத்தொழில்களுக்குரியதாகக் கிடைக்க வேண்டிய மற்றும் ஒப்பந்தகாரருக்குச் செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 1,847,526 ஆக இருந்த போதிலும், அது ரூபா 184,753 ஆக சீராக்கப்பட்டமையின் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 1,622,773 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2016 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வுச் சபை சிபாரிசின் பிரகாரம் ரூபா 1,043,000 தொகையில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்த 04 வாகனங்களின் கிரயம் இனங்காணப்படாமல் ஏல விற்பனைப் பெறுமதி சொத்துக் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டமையின் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோட்டார் வாகனங்களினதும் வண்டியினதும் பெறுமதி சரியானதாக இருக்கவில்லை.

(ஊ) முற்பணமாகப் பெறப்பட்ட வருமானமாக 2014 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 10,646 தொகையை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 07 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் படியான மீதிக்கும் இடையே ரூபா 3,293,297 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் 2017 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான ரூபா 97,831,902 தொகையான மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான விரிவான பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,124,182 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,030,491 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 626,300 | 848,489 | 871,840 | 149,210 | 520,350 | 615,490 | 749,179 | 153,036 |
| வாடகை | 3,974,775 | 4,133,380 | 4,142,544 | 3,240,504 | 3,551,620 | 3,459,056 | 3,472,598 | 4,129,513 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 208,360 | 330,977 | 309,567 | - | 253,030 | 480,274 | 332,213 | 19,120 |
| ஏனைய வருமானம் | 1,677,200 | 5,509,458 | 2,022,974 | 8,408,065 | 3,687,700 | 4,277,704 | 1,728,268 | 6,110,879 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது வீதவரியும் வரியும், வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைகளுக்கான கட்டணம் மற்றும் ஏனைய வருமானம் போன்ற விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவினைவிட முறையே 39 சதவீதம், 04 சதவீதம், 49 சதவீதம், 69 சதவீதம் மற்றும் 32 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் மற்றும் அரசாங்க பங்களிப்பு போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதிடப்பட்ட அளவினை விட முறையே 13 சதவீதத்தாலும் 26 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

**(அ) ஆதன வரி**

2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 75 ஆதன வரி அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட நிலுவை மீதி ரூபா 28,693 ஆகும்.

**(ஆ) ஏக்கர் வரி**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 113,496 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட 122 அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய மொத்தம் ரூபா 76,700 ஆகும்.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் முதல் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 1,433,500 தொகையான நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு 2018 மார்ச் வரையிலும் சபை தவறியிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) திட்டமிடப்பட்ட இலக்குகளை நிறைவேற்றாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது வேலையினைப் பூர்த்தி செய்யும் நிபந்தனைகளின் அடிப்படையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நிதிஏற்பாடு வழங்கப்பட்ட மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 16,898,996 தொகையான இரண்டு செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

(ii) 2017 ஆம் ஆண்டின் மூலதனச் செலவின மதிப்பீட்டின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் 07 வீதிகள் மற்றும் 03 கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 16,126,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அபிவிருத்தி பணிகள் எதுவும் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) சபைக்குச் சொந்தமாக போதியளவான நிதிசக்தி உள்ளமையால் அந்த நிதியைப் பயன்படுத்தி 03 அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக உள்ளூராட்சி ஆணையாளரிடமும் பிரதம அமைச்சுச் செயலாளரிடமும் அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், அந்த அங்கீகாரம் கிடைக்காமையின் காரணமாக அந்த அபிவிருத்தி செயற்திட்டங்களை மீளாய்வாண்டில் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

#### (ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் கழிவுப்பொருட்களை அகற்றும் போது உக்காத பொருட்கள் வகைப்படுத்தி பெறப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற போதிலும், உக்குகின்ற கழிவுகள் அயகம நகரத்தில் விளையாட்டு மைதானத்திற்கு அடுத்தால் குழிகள் வெட்டி மூடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டு அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

(ii) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(ix)(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் மலம் அகற்றல் மற்றும் கழிவுகளை எடுத்துச் செல்லல் மற்றும் அதற்காக கட்டணங்களை அறவிடல், உபவிதிகளுக்குரிய விடயங்களாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந்

திகதியளவில் அது தொடர்பாக உபவிதிகளை விதித்து அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

2017 மே மாதம் ஏற்பட்ட எதிர்பாராத இடர்நிலைமையினால் அயகம பொலிஸ் நிலையம் அமைந்துள்ள நிலம் மண்சரிவு அபாயம் காணப்பட்டமையின் காரணமாக பிரதேச சபைக்குச் சொந்தமான பஸ் நிலையத்தின் மேல்மாடி, மதிப்பீட்டு வாடகை செலுத்தும் அடிப்படையில் 06 மாத காலத்திற்கு பொலிஸ் நிலையத்தை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 06 மாத காலத்தைக் கடந்திருந்த போதிலும், அத்திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய 114,300 தொகையான வாடகை 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படாதிருந்ததுடன் முறையான வாடகை உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட கட்டிடம் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் சபைக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் மேல்மாடி 05 கடைகளுக்காக அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. பிரதேச சபையின் இணக்கப்பாடின்றி கட்டிடத்தில் பௌதீக மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும், பொலிஸ் நிலையம் அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டிராமையின் காரணமாக இலக்கிடப்பட்ட பணிகளுக்காக கட்டிடத்தைப் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(இ) புறநெகும செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட பொது மலசலகூடம் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாவனைக்காக மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டமையின் காரணமாக நகரத்திற்கு வருகை தருகின்ற பொதுமக்களுக்கு பொது மலசலகூட வசதிகள் உரித்தற்றுப் போயிருந்தது.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

02 வருடங்கள் முதல் 04 வருடங்கள் வரையிலான காலம் பயன்படுத்தப்படாதிருந்த சபைக்குச் சொந்தமான வாகனம் மற்றும் 03 இயந்திர உபகரணங்கள் 2017 ஆகஸ்ட் வரையிலும் தேவையான பழுதுபாத்தல்களை மேற்கொண்டு செயற்படக்கூடிய நிலைக்கு கொண்டுவருவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து கிடைத்த மோட்டார் கிறேடரைப் பயன்படுத்துவதிலுள்ள வசதியீனங்களால் 02 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

**3.4 பெறுகைகள்**

**3.4.1 பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 19 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,638,500 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 11 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு மொத்த நிதிஏற்பாட்டில் 83 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்து செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் இனங்காணப்படாமை. |
| | | (ii) | நிதிக்கூற்றுக்களுக்கும் பட்டோலைகளுக்குமிடையே இணக்கமின்மைகள் காணப்பட்டமை. |
| (ஆ) | வருமான நிர்வாகம் | | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) | சொத்துக்களின் பயன்பாடு | | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | | நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை. |